நகராட்சி நிர்வாக ஆணையரகம்
-4 SEP 2008
சென்னை

சுருக்கம்

திட்டங்கள் - 2008 – 2009 – ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் – பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுது நீக்கம் மற்றும் புனரமைப்புப் பணிகளுடன் கழிப்பறை வசதிகள் மேற்கொள்ளுதல் – அனுமதி - ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசாணை (நிலை) எண். 139 நாள் : 28.08.2008

படிக்கப்பட்டவை :

1) அரசாணை (நிலை) எண்.94, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.6.2007.
2) அரசாணை (நிலை) எண்.97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6.6.2008.
3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.11913/08/பரா2.2, நாள் . 13.8.2008.

- - -

ஆணை :-

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2007-08-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.135 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, 2006-07 மற்றும் 2007-08ஆம் ஆண்டுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் உள்ள 10,248 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ104.25 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 16.04.2008 அன்று சட்டப்பேரவையில் 2008 -09 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென அறிவித்தார். மேலும், 2008–09ம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் இசைவோடு 2008–09ம் ஆண்டு முதல் பேரூராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்.

2) இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2008–09 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக வழிகாட்டு நெறிமுறைகளுடன், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து ரூ. 60 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் 2007-08ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ.30.75 கோடி உபரி நிதி உள்ளது எனவும், 2008-09ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.60 கோடியுடன் சேர்த்து மொத்தம் ரூ.90.75 கோடி நிதி ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டத்திற்காக உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், 2008–09–ம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளை ரூ.69.30 கோடியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

4) கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே இருந்த ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இருந்த பகுதிகள் பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்ட போதிலும், அவை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் சொத்துக்களாகவே இருந்து வருகின்றன எனவும், இப்பள்ளிகள், பல காலமாக பராமரிப்பின்றி மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அவற்றை பழுது நீக்கம் மற்றும் புனரமைப்பு செய்ய வேண்டியது அவசியமாகிறது எனவும் பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் 2,650 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் உள்ளன எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லை எனவும், ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், முழு சுகாதார திட்டத்தின்கீழ் கழிப்பறைகள் கட்டித் தரப்படுகிறது எனவும், ஆனால் நகரப் பகுதிகளான பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் முழு சுகாதார திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதிகள் செய்ய இயலவில்லை எனவும், ஆகவே, பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பழுது நீக்கம் மற்றும் புனரமைப்புப் பணிகளுடன் கழிப்பறை வசதிகளையும் படிப்படியாக எடுத்துக் கொள்ளலாம் எனவும், மேலும் இத்திட்டத்தினை 2008-09–ஆம் ஆண்டில் ரூ.11.68 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு செயல்படுத்தலாம் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியங்களின் விபரம் | பள்ளியை தேர்வு செய்வதற்கான முறை | முன் மொழிவு செய்யப்படும் பள்ளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் 5 பள்ளிகளுக்கு குறைவாக இயங்கும் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (90) | ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பள்ளி வீதம் | 90 |
| 2 | பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் 5 முதல் 9 பள்ளிகள் வரை இயங்கும் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (92) | ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பள்ளி வீதம் | 92 |
| 3 | பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் 10 பள்ளிகளுக்கு மேல் இயங்கும் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (95) | ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மூன்று பள்ளி வீதம் | 285 |
| | முன்மொழியப்படும் மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை | | 467 |

5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆராய்ந்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது :-

(i) 2008-09ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தினை ஊரகப் பகுதிகளில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி1) துறை, நாள் 6.6.2008–ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பழுது நீக்கம் மற்றும் புனரமைப்புப் பணிகளுடன் கழிப்பறை வசதிகளை செய்யவும் 2008-09 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 467 பள்ளிகளில் மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பள்ளிகளைத் தேர்வு செய்து இத்திட்டத்தினை செயல்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஒவ்வொரு பள்ளியிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்ப்புப் பணிகளை கண்டறிய கீழ்கண்ட நபர்களை உறுப்பினர்களாக கொண்ட தேர்வுக் குழுவினை அமைக்க அனுமதிக்கப்படுகிறது.

(அ) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) – குழுவின் அமைப்பாளர்.
(ஆ) ஊராட்சி ஒன்றிய பொறியாளர்/ உதவிப் பொறியாளர் (ஊ.வ).
(இ) தொடர்புடைய உதவி தொடக்கக்கல்வி அலுவலர்
(ஈ) ஊராட்சி ஒன்றியப் பள்ளியின் தலைமையாசிரியர்.

(iii) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளிகளில் பழுது நீக்கம் மற்றும் புனரமைப்பு செய்ய சுமார் ரூ.2 லட்சம் மதிப்பீட்டிலும் அவை நகரப் பகுதிகளில் இயங்குவதால் ஒவ்வொரு பள்ளிக்கும் கழிப்பறை வசதி செய்ய கூடுதலாக ரூ50,000/- ஒதுக்கீடு செய்து 467 பள்ளிகளில் பழுது நீக்கம், புனரமைப்பு மற்றும் கழிப்பறை வசதிகள் மேற்கொள்ளவும் கீழ்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு பள்ளிக்கும் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் ரூ.2 லட்சம் வீதம் 467 பள்ளிகள் | : | ரூ. 9.34 கோடி |
| ஒவ்வொரு பள்ளிக்கும் கழிப்பறை வசதி செய்ய ரூ. 50,000 வீதம் 467 பள்ளிகள் | : | ரூ. 2.34 கோடி |
| மொத்தம் | : | ரூ.11.68 கோடி |

(iv) 2008-09 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ. 69.30 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் இயங்கும் 467 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.11.68 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.80.98 கோடி (ரூ. 69.30 கோடி + ரூ.11.68 கோடி) மதிப்பீட்டில் பழுது நீக்கம் மற்றும் புனரமைப்பு

செய்யவும், ஒப்பந்தப் புள்ளிகளுக்கும் கூடுதலாக நிதி தேவைப்பட்டாலும் அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமை இல்லாத வகையில் ரூ.90.75 கோடிக்குள் மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15
அரசுச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை – 108.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊ.வ.இயக்குநர் மூலமாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா1) துறை (தொடர் நடவடிக்கைக்காக)
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.